**இன்று (13.08.2009) சென்னையில் நடைபெற்ற கன்னடக்கவிஞர் சிலை திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—**

கடந்த 9ஆம் நாள் கர்நாடகத்தினுடைய தலைநகரமாம், பெங்களூருவில் அய்யன் வள்ளுவருடைய சிலையைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தமிழகத்திலே குமரி முனையிலே இருந்து சென்னை நகரம் வரையில் எத்தனையோ சிலைகள் வள்ளுவப் பெருமகனுக்கு – அய்யன் வள்ளுவருக்கு அமைத்து – ஏன் வள்ளுவர் கோட்டமே அமைத்து அங்கெல்லாம் அந்தச் சிலையை திறந்து வைக்கின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்றாலும் கூட, அங்கே சிலை திறக்கக் கூடாது என்று எண்ணியவர்களுடைய எண்ணம் தவறானது என்பதை எடுத்து விளக்குகின்ற வகையில், 18 ஆண்டு காலம் கர்நாடகத்திலே நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிக்கும், அது கழக நிகழ்ச்சியானாலும் சரி, வேறு பொது நிகழ்ச்சியானாலும் சரி, என்னை அழைத்தபோதெல்லாம், "திருவள்ளுவருடைய சிலை திறந்த பிறகுதான் பெங்களூருவில் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாக இருக்கிறேன்" என்று சொல்லி, அப்படி மேற்கொண்ட சபதத்தை நிறைவேற்றிய அந்த சிறப்புக்குரியவராக நம்முடைய கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா அவர்கள் விளங்குகிறார் என்பதை நன்றியுணர்வோடு நான் எடுத்துக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்று இந்த விழாவிற்கு வீட்டிலே இருந்து கிளம்பி வருகின்ற நேரத்தில் வழியெல்லாம் கொடிகள். அந்தக் கொடிகள் பறப்பதைப் பார்க்கும்பொழுது ஒரு பாமர மனிதனுக்கு என்ன சந்தேகம் வரும் என்றுகூட கருதினேன். "ஒருவேளை அணி மாறிவிட்டதா ?" என்று எண்ணுகின்ற அளவுக்கு பாரதிய ஜனதா கட்சியினுடைய கொடிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பறந்த அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

9ஆம் தேதி பெங்களூரு விழாவை முடித்துக் கொண்டு, அன்று மாலையிலே புறப்பட்டு இரவு சென்னைக்கு வந்ததும், இந்த விழா ஏற்பாடுகளை முன்னின்று கவனிக்கின்ற தம்பி பரிதி இளம்வழுதியையும் – கேட்டறிந்து என்னிடத்திலே செய்திகளைச் சொல்லுகின்ற ஆற்காடு வீராசாமி அவர்களையும் தொடர்பு கொண்டு என்ன நடக்கிறது என்று கேட்டபோது, "ஜீவா பூங்காவில் கர்நாடக மாநிலத்து அமைச்சர்களும், அமைப்பாளர்களும் ஒரு இடத்தைப் பார்த்திருக்கிறார்கள். அந்த இடத்தை செப்பனிட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். நான் கேள்விப்பட்டது ஜீவா பூங்கா இந்த மேடை அளவுதான் இருக்கும். அதிலே எப்படி இந்த விழாவை நடத்த முடியும் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆகவே 10ஆம் தேதி காலையில் நானும், ஆர்க்காட்டார் அவர்களும் இந்த இடத்திற்கு விரைந்து

வந்து, இந்த இடம் போதுமானதாக இருக்கிறதா என்று ஜீவா பூங்காவில் பார்த்த போது, பெயர் அழகாக இருக்கிறது, பொருத்தமாக இருக்கிறது. எந்தக் கருத்துக்களை சர்வக்ஞர் எடுத்துச் சொன்னாரோ அந்தக் கருத்துக்களை அண்ணன் ஜீவானந்தம் அவர்கள், அவருடைய கட்சியின் சார்பிலே அல்ல; தனிப்பட்ட முறையில் அவர் சுயமரியாதைக்காரர், பகுத்தறிவுவாதி என்ற நிலையிலும் எடுத்துச் சொல்லியிருந்த காரணத்தால் அவருடைய பெயரால் அமைந்த பூங்காவில் இந்தச் சிலையை திறப்பது எவ்வளவோ பொருத்தம் என்று கருதினேன். ஆனால் திறக்கப்பட்ட பிறகு சிலை அமையப்போகிற இடம் ஜீவா பூங்காதான். இருந்தாலும் பல்லாயிரக்கணக்கிலே வந்து குழுமி வாழ்த்துரைக்க வேண்டிய உங்களையெல்லாம் அமர வைக்க அங்கே இடமில்லையே என்ன செய்வது என்று யோசித்து பரிதியிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தேன். பரிதி அதை ஏற்றுக் கொண்டார். நான் சொல்லுகின்றேன்; 10ஆம் தேதி அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் 10ஆம் தேதி பெரு மழையின் காரணமாக பணி எதுவும் தொடங்கப்படவில்லை. இடையிலே 11, 12 – அதிலும் 11ஆம் தேதி மழையினால் பாதிக்கப்பட்ட இந்த இடங்களை சீர்படுத்த இயலாத சூழ்நிலை. என்ன செய்வது என்று யோசித்தபோது, “தம்பியுடையான் படைக்கு அஞ்சான்” என்ற நிலையிலே தம்பிகளைப் பெற்றிருக்கிற நாம் இதற்கு அஞ்சலாமா என்று, “எப்படிச் செய்வீர்களோ தெரியாது, நாளைக்கு விழா மேடையும், விழாப் பந்தலும் ‘விழாத’ அளவிற்கு நீங்கள் உருவாக்க வேண்டும்” என்று அவர்களுக்கு அன்புக் கட்டளையிட்டேன். அந்த அன்புக் கட்டளையை ஏற்று அவர்கள் ஆற்றிய பணியினுடைய வடிவம்தான் இங்கே நீங்கள் காணுகின்ற இந்த பந்தலும், மேடையும் . (கைதட்டல்)

இவ்வளவு பெரிய முயற்சியால் ஒரே நாளில், மழை எப்போது வருமோ என்று ஆராய்ந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டே இருந்து இந்த இடத்தை சீர்செய்து, ஜீவா பூங்காவில் இருந்து இங்கே வருகிற வழியில் கூட அந்தச் சாலை மேடுபள்ளங்களாக இருக்கிறது. அதை சீர்படுத்த வேண்டுமென்று மாநகராட்சி மன்றத்து நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களும் அதைச் சீர்படுத்தி ஒருவழியாக இப்பொழுது இந்த விழா மிக மிக மிக எழிலார்ந்த முறையில் எழுச்சி நிலையில் நடந்து கொண்டிருக்கின்றது. நான் இதற்காக அனைவருக்கும் நன்றி சொன்னாலும்கூட, இந்த மேடையை அமைத்து பந்தலை அமைத்துக் கொடுத்து விழா சிறப்புற நடைபெற அரும்பணியாற்றிய ஜெ.பி. கிருஷ்ணாவுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிருஷ்ண ஜெயந்தி – ஆகவே கிருஷ்ணனை போற்றுவோம் என்று சொன்னார்கள். நான் இந்த கிருஷ்ணனுக்குதான் நன்றி கூறவேண்டியவனாக இருக்கிறேன். (கைதட்டல்) இந்த கிருஷ்ணனுடைய பணியினால்தான்

இவ்வளவு பெரிய எழுச்சி மிக்க, எழிலார்ந்த மேடையையும், பந்தலையும் நாம் காண முடிகிறது. அப்படிப்பட்ட உழைப்பாளிகள் இந்த இயக்கத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் பணியை வெற்றி கரமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிலை நிரந்தரமாக அமையப் போகிற இடம் ஜீவானந்த பூங்கா, அங்கே இந்த சிலை அமைந்த பிறகு – இப்போது கூட விழா முடிந்து நானும், நம்முடைய கர்நாடக முதலமைச்சரும், அமைச்சர் பெருமக்களும் அந்த இடத்திற்குச் சென்று சிலையை பார்த்துவிட்டுத் தான் வீட்டுக்குப் போக இருக்கிறோம். அவரும் பெங்களூருக்குத் திரும்ப இருக்கிறார். இத்தகைய முயற்சியிலே இன்றைக்கு நான் ஈடுபட்டிருப்பதற்கு என்ன காரணம்? பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை வைத்தால், இங்கே கவிஞர் சர்வக்ஞருக்கு சிலை வைக்க வேண்டும் என்பது ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட பேரமல்ல, நிச்சயமாக பேரமல்ல, நட்பு முறையில், அன்பு முறையில், பரஸ்பரம் அங்கே வள்ளுவர், இங்கே சர்வக்ஞர் இருவரும் இருந்தால் அந்த சிலைகளைப் பார்க்கிற நேரத்தில் அவர்களுடைய பொன்மொழிகளை, அவர்களுடைய அறிவுரைகளை மக்கள் எண்ணிப் பார்த்து அதன்படி நடப்பதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள் என்பதுதான்.

திராவிட மொழிக் குடும்பத்தில் பழமையான மொழிகளிலே ஒன்றாக தமிழ் மொழி இருக்கிறது என்றாலும்கூட தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இந்த உணர்வோடு பிற மொழிகளையும் அரவணைத்து அந்த மொழிகளின் வளர்ச்சியிலே தனிக் கவனம் செலுத்தி, அந்த மொழிகளுக்கு உரிய உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது என்பதை மிக நன்றாக அறிவீர்கள்.

சென்னை மாநகரில் அமைந்துள்ள கன்னட சங்கம் நடத்துகின்ற மேல்நிலைப் பள்ளிக்கு தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கன்னட புத்தாண்டு நாளாகிய யுகாதித் திருநாளை தமிழகத்திலே அரசு விடுமுறை நாளாக அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல தெலுங்கு வருடப் பிறப்பை நாம் கொண்டாடுகிறோம். கேரளத்திலே கொண்டாடுகிற ஓணம் பண்டிகையை முன்னிட்டு பகுதி, பகுதியாக இங்கே விடுமுறை வேண்டும் என்று கேரள மக்கள், மலையாள மொழி பேசுகின்ற மக்கள் கேட்கின்ற போதெல்லாம் அவர்களுடைய விருப்பத்தையேற்று அவர்கள் வாழும் பகுதிகளில் ஓணம் பண்டிகைக்கான விடுமுறையை மலையாள மாந்தருக்காக இங்கே அனுமதிக்கின்றோம்.

கன்னட மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் தமிழகப் பள்ளிகளில் கன்னட மொழியை முதன்மை மொழியாக தேர்வு செய்து படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பள்ளிகளில் குழந்தைகள் கன்னட மொழி பயில்வதற்குரிய பாட நூல்களை தமிழக அரசே உருவாக்கி அவற்றை உருவாக்க கன்னட மொழி அறிஞர்கள் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவின் கருத்துக்களின் அடிப்படையிலே கன்னட மொழி பாட நூல்கள் தமிழக அரசால் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு தயாரிக்கப்படும் கன்னட மொழி பாடநூல்களை தமிழ்நாடு அரசு நிறுவனமாகிய, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் மூலமாகவே அச்சிட்டு அவற்றை கன்னடக் குழந்தைகளுக்கு இந்த அரசு வழங்கி வருகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

கன்னட மொழியைக் கற்பிக்க கன்னட மொழி ஆசிரியர்களையும், பள்ளிகளில் நியமனம் செய்துள்ளது தமிழக அரசு.

தமிழகத்திலே வாழும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கன்னட மொழியை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தங்கள் மொழியை தமிழக பள்ளிகளில் முறையாகப் படித்திட, அனைத்து உதவிகளும் தடையின்றி இந்த அரசால் வழங்கப்படுகின்றது. மற்ற மாநில மக்களின் உணர்வுகளை தமிழகம் மதிக்கிறது, போற்றுகிறது என்பதற்கு இது ஒரு முக்கியமான அடையாளச் சான்று என்பதை நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே சிலையாக நம் முன்னால் நிற்கின்ற சர்வக்ஞருடைய வரலாற்றுக் குறிப்புகள் நம்மிடத்திலே எதுவும் இல்லை என்று இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். நமக்குக் கிடைத்திருப்பது – 1565ஆம் ஆண்டுவாக்கில் கிருஷ்ண தேவராயர், விஜய நகர சாம்ராஜ்யத்தைப் பரிபாலித்த அந்தக் காலத்தில் சர்வக்ஞர் வாழ்ந்தார் என்ற வரலாறு தான் நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த வரலாற்றை நான் கற்றிருக்கிறேனோ, கற்றுத் தெளிந்து இருக்கிறேனோ, என்ற அய்யப்பாட்டின் காரணமாக கன்னட மொழியில் சிறந்த பாவலர்கள், நாவலர்கள் கன்னட மொழி காவலர்கள் நம்முடைய நண்பர் ஹண்டே போன்றவர்கள் அடிக்கடி எனக்கு கடிதம் மூலமாக, தொலைபேசி மூலமாக சர்வக்ஞருடைய வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

நேற்றையதினம் நான் பெங்களூருவில் பேசுகின்ற நேரத்திலே கூட,அவர் எழுதிய குறிப்புகள் எனக்கு வந்து சேர்ந்தன. இப்படி தமிழ்நாட்டிலே உள்ளவர் கள் மாத்திரமல்ல, வெளி மாநிலங்களிலே உள்ளவர்களும், இந்தியாவில் பல பகுதிகளில் வாழ்பவர்களும் இந்தச் சிலை திறப்பு விழாவை மிக முக்கியமாக கருதுகிறார்கள்.

திருவள்ளுவர் சிலையைத் திறந்தோம், சர்வக்ஞர் சிலையைத் திறந்தோம் என்பது மாத்திரமல்ல – இரண்டுக்கும் பொதுவாக தமிழர்களுக்கும், கர்நாடக மக்களுக்கும் ஒரு ஒற்றுமை சிலை இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது (பலத்த கைதட்டல்) என்பது தான் பெரிய வரலாறு. நாமெல்லாம் மகிழத் தக்க வரலாறு.

மூன்று வரிகளில் இவர் கவிதைகளைச் சொன்னார். அதை "திரிபதி" என்று கூறுவார்கள். அவர் சொல்லுகிறார் – எவ்வளவு அருமையான உவமைகளை யெல்லாம் சர்வக்ஞர் எடுத்தாண்டிருக்கிறார் என்பதற்கு ஒரு உவமையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

"பற்களுக்கிடையில் வாழ்ந்திடும் நாவினைப்போல் தீயோர் இடையில் நல்லவரும் சேர்ந்திருப்பர்" – பற்களின் குணம் என்ன ? தவறினால் அது நாவினையே கடித்து விடும். அப்படிப்பட்ட பற்களுக்கிடையே உள்ள மென்மையான நாக்கைப் போல் – கொடுமையான சிந்தனை உடையவர் களுக்கிடையே மென்மையான சிந்தனை உடையவர்கள் இருக்கிறார்கள், இருப்பார்கள் என்று சர்வக்ஞர் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால் மூடப் பழக்க வழக்கங்களை கட்டோடு வெறுத்தவர் சர்வக்ஞர். மூடப் பழக்க வழக்கங்களுக்கு மனிதர்கள் அடிமைகளாக ஆகக் கூடாதென்று அவருடைய பாடல்கள் மூலமாக அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். ஒரு பாடல் –

"செத்துப் பிறப்பர் என்பது பொய்மொழியே
வித்தினால் விளைவ தன்றோ–மரம்
சத்திழந்து பட்டபின் துளிர்ப்பதுவோ சர்வக்ஞ"

செத்தவர்கள் மீண்டும் பிழைப்பார்கள் – மறு பிறவி உண்டு என்றெல்லாம் சொல்வதை சர்வக்ஞர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சர்வக்ஞருடைய சிலை திறப்பு விழாவிலே அவரை வாழ்த்துகின்றவர் கள் – அவரைப் பாராட்டுகின்றவர்கள் – அவரைப் பின்பற்ற வேண்டுமென்று கருதுகின்றவர்கள் இந்த வரிகளை உள்ளத்தின் ஆழத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லுகிறேன். இன்னொன்று.

"மெய்யுறுப்புகள் ஒத்தன மாந்தருக் கெனில்
உயர்ந்தோன் தாழ்ந்தோன் பக்த நாத்திகனெனும்
பொய்ப் பாடல்கள் வந்ததெங்கே சர்வக்ஞ"

உடம்பிலே உள்ள உறுப்புக்கெல்லாம் – ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே – அந்த அவயவங்கள் எல்லாம் ஒத்தவை என்று சொல்லும்போது – அதிலே உயர்ந்தவன் என்ன, தாழ்ந்தவன் என்ன, பக்தன் என்ன, நாத்திகன் என்ன – இதெல்லாம் பொய்ப் பாடல்கள் என்று அழுத்தந் திருத்தமாக, ஆணி அடித்தாற்போல சர்வக்ஞர் சொல்லுகிறார்.

“சுழலும் உலகொன்றே பருகும் நீரொன்றே
சுடுகின்ற தீயொன்றே சாதியும் குலமும்
நடுவே புகுந்ததெவன் சர்வக்ஞ”

இதுவும் அவருடைய பாடல். சுழலும் உலகம் ஒன்று – பருகும் நீரும் ஒன்று – சுடுகின்ற தீயும் ஒன்று – சில சாதியும் குலமும் நடுவே எப்படி புகுந்தது என்று கேட்கிறார். இந்தக் கேள்வி திருவள்ளுவரை எனக்கு ஞாபகப்படுத்து கின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அய்யன் வள்ளுவரை நினைவுபடுத்துவது மாத்திரமல்ல – இன்றைக்கும் தந்தை பெரியாருடைய கருத்துகள் வாழ்கின்ற தமிழ் நிலத்தில் பெரியாரை நினைவுபடுத்துகின்ற கருத்துகளை சர்வக்ஞர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

சர்வக்ஞர் கேலியாக, கிண்டலாக, நையாண்டியாக பல பாடல்களை இயற்றியுள்ளார். அதிலே ஒன்றை, உதாரணத்திற்காக உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

புராணத்தில் படைப்புத் தொழில் ஆற்றுபவர் பிரம்மா என்று கேள்விப் பட்டிருக்கிறோம், படித்திருக்கிறோம். புராணங்களில் எழுதியிருக்கிறார்கள். கதாகாலட்சேபங்களில் கேட்டு ரசித்திருக்கிறோம். இவர் என்ன சொல்லு கிறார் தெரியுமா ?

படைத்தவன் பிரம்மனெனும் பற்று வேண்டற்க
படைத்தவன் சிரத்தை சிவனறுக்க – பிறிதொன்றை
படைத்துக் கொள்ளாததேன் சர்வக்ஞ.

நம்மைப் படைத்தவன் பிரம்மா என்கிற அந்த எண்ணம் வேண்டாம் – ஏனாம் ? இங்கே தான் எவ்வளவு பெரிய நையாண்டியாக தான் சொல்ல வந்த கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. படைத்தவன் பிரம்மா என்னும் பற்று வேண்டற்க – பிரம்மாவிற்கு ஐந்து தலைகள். இப்போது பார்க்கும் பிரம்மாவிற்கு நான்கு தலைகள் – அதைப் போல பரமசிவத்திற்கும் ஐந்து தலைகள். ஒரு நாள் பார்வதி தேவி அவசரமாக – நான் புராணத்தைச் சொல்லுகிறேன் – யாரும் தவறாகக் கருதக் கூடாது – பார்வதி தேவி அவசரமாக அந்தப் புரத்தில் நுழைந்தபோது அங்கே ஒரு அவசர வேலையாக பிரம்மாவும் வந்திருந்தார். இவர் கணவன், ஐந்து தலையுடைய சிவன் என்ற காரணத்தால் – பின் பக்கமாக தலையை எண்ணிப் பார்த்து – வந்திருப்பது தன் கணவன் சிவன் தான் என்றெண்ணி ஏமாந்தாள் – அவ்வளவு தான். இது பரமசிவனுக்கு தெரிந்தது. பார்வதி ஏமாந்து போக என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்தான். பிரம்மாவுக்கு நம்மைப் போல ஐந்து தலைகள் இருந்த காரணத் தால் அல்லவா, பார்வதி தலையை எண்ணிப் பார்த்து ஏமாந்து விட்டாள் என்று – பரமசிவன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்து

விட்டான். அதற்குப் பிறகு தான் பிரம்மாவிற்கு நான்கு தலைகள் – இது புராணம். கருணாநிதி செய்கின்ற காலட்சேபம் அல்ல. புராணத்தில் உள்ளதைச் சொல்கிறேன். அதன் பிறகு பிரம்மா நான்கு தலைகளோடு இருந்தார். அதைத் தான் வைத்து நம்முடைய பாவலர் சர்வக்ஞர் பாடுகிறார்.

படைத்தவன் பிரம்மனெனும் பற்று வேண்டற்க
படைத்தவன் சிரத்தை சிவனறுக்க – பிறிதொன்றை
படைத்துக் கொள்ளாததேன் சர்வக்ஞ.

சிவன் ஒரு தலையை கிள்ளி எறிந்த பிறகு, பிரம்மா தான் படைப்புத் தொழிலில் கெட்டிகாரன் ஆயிற்றே, இன்னொரு தலையை ஏன் படைத்துக் கொள்ளக் கூடாது என்று பிரம்மாவைப் பார்த்து சர்வக்ஞர் கேட்கிறார். அது ஒரு கவிதையாக அவருடைய நூலிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்படி புதிய கருத்துகள் – புரட்சி எண்ணங்கள் – புயல் வேக பிரதிபலிப்புகள் ஆகியவற்றை யெல்லாம் கவிதை மூலமாக மக்களுக்குத் தந்து மக்கள் சாதி மதமற்ற நிலையில் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைத்த கர்நாடக மாநிலத்திலே உலவி இன்றைக்கு தமிழகப் பூமிக்கும் அடியெடுத்து வைத்து – இங்கே அவர் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே நாம் அவரை அறிவோம். அவருடைய கருத்துகளை நம்முடைய உள்ளத்திலே ஏந்தியிருக்கிறோம். மேலும் சிலை எடுப்பது மாத்திரமல்ல, அவருடைய கருத்துகளை பின்பற்றக் கூடிய மனப் பக்குவத்தை நாமெல்லாம் பெற வேண்டும்.

நம்முடைய கர்நாடக மாநில முதல் அமைச்சர் அவர்கள் எழுதி வந்திருக்கின்ற உரையிலே கூட, என்னை விளிக்கும்போது தமிழக முதல் அமைச்சர் பெரியண்ணா கருணாநிதி அவர்களே என்று விளித்தார். நாம் அண்ணன் தம்பிகளாகப் பிறக்கவில்லை, முத்துவேலருக்கு. எனக்கு ஒரு தம்பி இல்லாத குறையை, கர்நாடக முதலமைச்சர் (கைதட்டல்) இன்றைக்குப் போக்கியிருக்கிறார். அவரை நான் தம்பியாக ஏற்றுக் கொண்டதால், மற்ற தம்பிகள் யாரும் வருத்தப்பட மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். (கைதட்டல்) அந்தத் தம்பிகள் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு, இந்தத் தம்பி நமக்குக் கிடைத்திருக்கிறார். தம்பி அவர்களே, சகோதரப் பாசத்தோடு, கர்நாடக மக்களையும் தமிழக மக்களையும் நடத்துவோம். அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வோம். நீங்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் எந்தப் பிரச்சினை ஆனாலும் அவைகளை நாங்கள் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வோம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். அது பலருக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். சுமூக நிலை ஏற்பட்டு விட்டால் பிறகு அவர்களுக்கு வேலை இல்லை அல்லவா ? (கைதட்டல்) அவர்களுக்கு வேலை வேண்டும் என்பதற்காக, எதிலும் – இலங்கைப் பிரச்சினையிலே கூட – சுமூக நிலை ஏற்படக் கூடாது என்று

வேண்டித் தவம் இருந்தவர்கள் யார் யார் என்று எனக்குத் தெரியும். இப்போது சுமூக நிலை ஏற்பட்ட பிறகும்கூட, அதைக் கிளறி விட்டுக் கொண்டிருக்கின்ற நிலையும் எனக்குத் தெரியும். எனவே நம்மை ஒன்றாகப் பார்ப்பவர்கள் – நாம் இருவரும் – இரண்டு மாநில மக்களுக்கு தலைவர்களாக இருந்து அவர்களை வழி நடத்தக் கூடியவர்கள் என்ற அளவில் நம்மை ஒன்றாகப் பார்ப்பவர்களுக்கு – நண்பர்களாகப் பார்ப்பவர்களுக்கு – அண்ணன் தம்பி களாகப் பார்ப்பவர்களுக்கு – இதிலே எப்படி கீழறுப்பு வேலை செய்யலாம் – எப்படி திசை திருப்பலாம் என்றெல்லாம் திட்டமிடுவார்கள். அதற்கு இடம் தராமல் நாம் இன்றைக்கு எடுத்துக் கொண்ட சபதம் நம்முடைய இரு மாநில மக்களும் ஒற்றுமையாக – அவரவர்கள் உரிமைகளை அவரவர்கள் பெற்று வாழ வேண்டும் என்ற அந்த நிலையை உருவாக்க இந்த அண்ணனும், தம்பி யும் பாடுபடுவோம் என்று இங்கே அமர்ந்திருக்கின்ற எத்தனையோ பல்லாயிரக் கணக்கான அண்ணாக்களுக்கும், தம்பிகளுக்கும் நான் எடுத்துரைத்து – அந்தப் பணிக்கு எங்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்று உங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டு – ஒரே நாளில், சில மணி நேரங்களில் இவ்வளவு பெரிய பந்தலை அமைத்து, இவ்வளவு அழகாக ஏற்பாடுகளை செய்து, மேடை அமைத்து எங்களை உற்சாகப்படுத்திய தம்பி பரிதி இளம் வழுதி அவர்களுக்கும், அவரோடு பணியாற்றிய இந்த வட்டாரத்து நண்பர் களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர் தம்பி பாபு அவர்களுக்கும் மற்றும் அவருக்கு துணை நின்றவர்களுக்கும், அத்தனை பேருக்கும் இந்தச் சிலை திறப்பு விழாவிலே என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து – எதற்கும் வராத கலையுலகப் பெருமக்கள் – சூப்பர் ஸ்டார், கலைஞானி கமல ஹாசன் போன்றவர்கள் எல்லாம் இங்கே வந்திருப்பது என்னை கௌரவிக்க என்றில்லா விட்டாலும் – சர்வக்ஞரைக் கௌரவிக்க என்ற அந்த வகையிலே அவர்களுக்கெல்லாம் நன்றியைக் கூறிக் கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.